**சென்னை மாவட்டம்,**
**முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**ந.க.எண். 3046/ஆ4/2023 நாள். .05.2023**

**பொருள்** சென்னை மாவட்டம் – குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் – 2023–24 ஆம் கல்வியாண்டில் அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு குறைந்தபட்சம் 25 % இட ஒதுக்கீடு வழங்குதல் – சேர்க்கை சார்ந்து வழங்கப்பட்ட அறிவுரைகள் பின்பற்றிட தெரிவித்தல் – சார்ந்து

**பார்வை** தமிழ்நாடு தனியார் பள்ளிகள் இயக்குநர் மற்றும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் மாநில முதன்மைத் தொடர்பு அலுவலரின் செயல்முறைக்கடித ந.க.எண்.3605/இ1/2023, நாள். 27.04.2023

*****

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் – 2023–24 ஆம் கல்வியாண்டில் அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு குறைந்தபட்சம் 25 % இட ஒதுக்கீட்டில் சேர்க்கைக்கான அறிவுரைகள், அதன் தொடர்ச்சியாக, இணையதள வழியாக விண்ணப்பங்கள் பதிவேற்றம் மற்றும் சேர்க்கை சார்பாக பின்பற்றிட வேண்டிய நடைமுறைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள பார்வையில் காணும் தமிழ்நாடு தனியார் பள்ளிகள் இயக்குநர் மற்றும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் மாநில முதன்மைத் தொடர்பு அலுவலரின் செயல்முறையினுடன் இணைத்து சென்னை மாவட்ட அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளின் தாளாளர் மற்றும் முதல்வர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

20.04.2023 முதல் 18.05.2023 வரையிலான நாட்களில் இணையதளம் வழியாக சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் பெற்றோர்களால் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. பதிவேற்றம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலினை செய்ததின் அடிப்படையில் தகுதியான விண்ணப்பங்களின் விவரங்களை பள்ளியின் EMIS Portal இல் தெரிந்து கொள்ளலாம். சேர்க்கை வழங்கிட தகுதியான இடங்களுக்கும் அதிகமான எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ள பள்ளிகளில் மாணவர் சேர்க்கை நடைபெற்றிட ஏதுவாக 23.05.2023 அன்று காலை 11.30 மணிக்கு குலுக்கல் நடைபெறவுள்ளது.

அது சமயம் பின்வரும் நடைமுறைகளை தவறாது பின்பற்றிட சென்னை மாவட்டம் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் / உதவித் திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த பள்ளிக்

Scanned with OKEN Scanner

கல்வி) இப்பணிக்கான கண்காணிப்பு குழுவில் இடம் பெற்றுள்ள தலைமை ஆசிரியர்கள் / வட்டாரக் கல்வி அலுவலர்கள் / வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொ) / சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளின் தாளாளர் / முதல்வர்கள் மற்றும் இப்பணிக்கான கண்காணிப்பு குழுவில் இடம் பெற்றுள்ள முதுகலை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- ❖ பள்ளியின் முதல்வர்கள் தங்கள் பள்ளிக்கு சேர்க்கை வேண்டி பெற்றோர்களால் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்யப்பட வேண்டும். நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் சார்பாக பெற்றோர்களிடமிருந்து கோரிக்கை ஏதும் பெறப்பட்டிருப்பின் குலுக்கல் நாளுக்கு முன்னர், அதன் மீது விசாரணை செய்து அதன் அடிப்படையில் பெற்றோர்களால் தேவையான ஆவணங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டால் அந்த விண்ணப்பத்தை குலுக்கலில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- ❖ பள்ளியின் முதல்வர்கள் தங்கள் பள்ளியில் சேர்க்கை வேண்டி விண்ணப்பித்துள்ள விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து சரிபார்த்து அதன் விவரங்களை சார்ந்த பெற்றோர்களுக்கு தெரிவித்திட வேண்டும்.
- ❖ இணைய வழியாக தங்கள் பள்ளிகளுக்கு விண்ணப்பித்துள்ள ஒவ்வொரு மாணவரின் இருப்பிடத்திலிருந்து பள்ளி அமைவிடம் 1 கிலோ மீட்டருக்குள் உள்ளதா? என்பதை சரிபார்த்து, சரியாக உள்ள விண்ணப்பங்களை மட்டுமே குலுக்கலுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.
- ❖ வாய்ப்பு மறுக்கப்பட்ட சிறப்பு பிரிவினரின் கீழ் விண்ணப்பித்திருந்தால், அக்குழந்தை கீழ்க்குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு பிரிவினரைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.
    - ஆதரவற்றோர்
    - எச்ஐவியால் பாதிக்கப்பட்ட குழந்தை
    - மூன்றாம் பாலினத்தவர்
    - துப்புரவு தொழிலாளியின் குழந்தை
    - மாற்றுத் திறனாளியாக இருக்கும் குழந்தை

  வாய்ப்பு மறுக்கப்பட்ட சிறப்பு பிரிவுகளில் ஏதேனும் ஒன்றின் கீழ் விண்ணப்பத்திருந்தால் அக்குழந்தைகளுக்கு குலுக்கல் நடத்துவதற்கு முன்னரே சேர்க்கை வழங்கிட வேண்டும். மேற்காண் பிரிவின் கீழ் வரும் மாணவர்களின் சான்றிதழ்கள் மாணவர்களின் பெயரிலும் துப்புரவுத் தொழிலாளர் குழந்தைக்கு பெற்றோரின் பெயரிலும் இருந்திட வேண்டும்.
- ❖ சேர்க்கைக்கு தெரிவு செய்யப்பட்ட குழந்தைகளின் பட்டியலில் குலுக்கலின் போது இருந்த ஆய்வு அலுவலர், பள்ளியின் தலைமையாசிரியர் / பள்ளி முதல்வர், குறைந்தபட்சம் இரண்டு பெற்றோர்கள் கையொப்பம் இடவேண்டும்.

Scanned with OKEN Scanner

❖ பள்ளிகளில் 23.05.2023 அன்று நடைபெறும் குலுக்கல் சார்பான அனைத்து விதமான பணிகள் தொடர்பான நிகழ்வுகளை வீடியோ மூலம் பதிவு செய்து பணி முடிந்த பின்பு குறுந் தகட்டில் பதிவு செய்திட வேண்டும்.

❖ சேர்க்கைக்கு தெரிவு செய்யப்பட்ட மாணாக்கர்களின் விவரத்தைப் பள்ளிக்கு வருகை புரியும் ஆய்வு அலுவலர் அன்றைய தினமே (23.05.2023) இணையதளத்தில் பதிவேற்றமும் செய்ய வேண்டும்.

❖ தேர்வு செய்யப்பட்ட மாணாக்கர்களின் பெற்றோர்களுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளனர் என 24.05.2023 அன்று தெரிவிக்கப்பட்டு குறுஞ்செய்தியும் அனுப்பப்படும்.

❖ குலுக்கலின் போது ஏதேனும் அசாதாரண சூழல் ஏற்படின் ஆய்வு அலுவலர்களைக் கொண்டு உடனுக்குடன் சரிசெய்ய வேண்டும்.

❖ நியமனம் செய்யப்படும் ஆய்வு அலுவலர்கள் 23.05.2023 அன்று தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பள்ளிக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொள்ள வேண்டும். அதன் பொருட்டு இப்பொருள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் பள்ளியில் பின்பற்றப்பட்டுள்ளதை உறுதி செய்திட வேண்டும்.

| வ. எண் | நிகழ்வு | தேதி |
|---|---|---|
| 1 | சேர்க்கைக்கு இணைதள வழியாக விண்ணப்பிக்க வேண்டிய நாள் | 20.04.2023 முதல் 18.05.2023 |
| 2 | தகுதியான விண்ணப்பதாரர் விவரம் / தகுதியில்லாத விண்ணப்பதாரர் விவரம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணத்துடன் பள்ளித் தகவல் பலகை மற்றும் இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டிய நாள் | 21.05.2023 பிற்பகல் 5 மணி |
| 3 | தகுதியான விண்ணப்பங்கள் 25% ஒதுக்கீட்டில் நிர்ணயிக்கப்பட்ட இடங்களைவிடக் கூடுதலாக இருந்தால் குலுக்கல் முறையில் தேர்வு செய்ய வேண்டிய நாள் | 23.05.2023 |
| 4 | குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் விவரங்கள், விண்ணப்ப எண் மற்றும் பள்ளியில் தகுதியுள்ள, ஒரு பிரிவுக்கு ஐந்து | 24.05.2023 |

Scanned with OKEN Scanner

| | | |
|---|---|---|
| | மாணாக்கர்கள் என்ற வீதத்தில் (வரிசை எண்ணிட்டு) காத்திருப்பு பட்டியலுக்கான மாணாக்கர்களின் விவரங்கள் ஆகியவற்றை பள்ளித்தகவல் பலகை மற்றும் இணையதளத்தில் வெளியிட வேண்டிய நாள். | |
| 5 | சேர்க்கை முடிவுற்றபின் அவ்விவரத்தினை நிர்ணயிக்கப்பட்ட படிவம் – 5 இல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு பள்ளி அளிக்க வேண்டிய நாள் | 29.05.2023 அன்று அல்லது அதற்கு முன்னர் |

மேற்காண் நடைமுறைகளை தவறாது பின்பற்றிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை மாவட்டம்

பெறுநர்

1. கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–03
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் சென்னை மாவட்டம்
3. உதவித் திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி ) சென்னை மாவட்டம்
4. அனைத்து அரசு/சென்னை/அரசு உதவி பெறும் நடுநிலை/உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள், சென்னைமாவட்டம்
5. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் சென்னை மாவட்டம்
6. முதல்வர்கள், சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகள், சென்னை மாவட்டம்

நகல்

1. துணை ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–03, அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது
2. இயக்குநர், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்கம், சென்னை–06 பணிந்து அனுப்பப்படுகிறது.
3. இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–06 பணிந்து அனுப்பப்படுகிறது.

Scanned with OKEN Scanner